# அரசு கலைக் கல்லூரி, அரியலூர்
## தமிழாய்வுத் துறை
## முதுகலை இரண்டாமாண்டு
## ஐந்தாம் பருவம்
## நாட்டுப்புறவியல் - P16TAE3

### நாட்டுப்புற வழிபாடுகளும் விழாக்களும்

நாட்டுப்புற மக்கள் தங்களுக்கு மேலான வல்லமை பெற்ற சக்திதான் தங்களையும், இந்த உலகத்தையும் இயக்கிக் கொண்டிருக்கின்றது என்ற உணர்வுடன் வாழந்து வருகின்றனர். தொடக்கக் காலத்தில் இடி, மின்னல், மழை, பூகம்பம், தீ போன்ற அச்சம் தரும் நிகழ்வுகளைக் கண்டு பயந்து, இவற்றுக்குக் காரணம் உலகின்கண் உலவுகின்ற எண்ணற்ற ஆவிகளே என நம்பினர். அந்த ஆவிகளின் சினத்தைத் தணிக்க அவற்றைத் தேவதைகளாக எண்ணி வழிபட்டனர்.

**வழிபாட்டு வகைகள்:**

நாட்டுப்புற மக்களின் வழிபாட்டு முறைகளை 1. இயற்கை வழிபாடு 2. ஆவி வழிபாடு 3. வீட்டுத் தெய்வ வழிபாடு 4. குலதெய்வ வழிபாடு 5. ஊர்த் தெய்வ வழிபாடு என ஐந்து வகையாகப் பகுப்பர்.

**1.இயற்கை வழிபாடு:**

இயற்கை வழிபாடு என்பது ஆதி மனிதர்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்தது. தான் முதலில் கண்டதும், தனக்குப் பேருதவியாக இருந்ததும், தன்னை அழிக்கும் ஆற்றல் கொண்டதும் ஆகிய சூரியன், சந்திரன், காற்று, மழை, புயல், இடி, மின்னல், மரம் போன்றவற்றை முதலில் வணங்கினர். இயற்கைப் பொருள்களைக் கண்டு ஏற்பட்ட வியப்பு, அதிர்ச்சி, அச்சம் என்னும் உள்ளத்து உணர்வுகளே சமயங்களும், கடவுளர்களும் தோன்றக் காரணமாயின் என்பார் மார்க்ஸ் முல்லர். இயற்கையின் செயல்களே மனிதனைத் தெய்வ நம்பிக்கைக்கும், சமய நம்பிக்கைக்கும் அழைத்துச் சென்றுள்ளன.

**2.ஆவி வழிபாடு:**

நாட்டுப்புற மக்கள், கண்ணுக்குப் புலனாகாத எண்ணற்ற ஆவிகள் உலவுவதாக நம்புகின்றனர். ஒரு மனிதன் இறந்த பின்னும் சிலகாலம்வரை, அந்த மனிதனின் ஆவி அவன் வாழ்ந்த பகுதிகளில் உலவும் என்றும், பின்னர் இறுதியாக ஓரிடத்தில் தங்கிவிடும் என்றும்,

அவ்வாறு தங்கிய ஆவிக்கு வழிபாடு செய்தால் அந்த மனிதனின் ஆவி மகிழ்ந்து பல உதவிகள் செய்யும் என்று நம்புகின்றனர்.

**3.வீட்டுத் தெய்வ வழிபாடு:**

வீட்டில் சுமங்கலியாக வாழ்ந்து, சுமங்கலியாகவே இறந்தவர்களை வீட்டுத் தெய்வமாகக் கருதி நாட்டுப்புற மக்கள் வழிபடுகின்றனர். இவ்வழிபாட்டு நாளன்று புதுப்புடவை, இரவிக்கைத் துணி, மஞ்சள், குங்குமம், தாலிக்கயிறு முதானவற்றை வைத்து, சர்க்கரைப் பொங்கலிட்டு, நடுவீட்டில் படையலிட்டு வழிபாடு செய்கின்றனர்.

**4.குலதெய்வ வழிபாடு**

ஒவ்வொரு இன மக்களும் தத்தம் குடும்பத்தினருக்கு என்று ஒரு குல தெய்வத்தை வழிபடுகின்றனர். மாரியம்மன், காளியம்மன், அங்காளம்மன், திரௌபதியம்மன், முத்தாலம்மன், பச்சையம்மன், மதுரை வீரன், முனிசுவரன், ஐய்யனார், காத்தவராயன், கருப்பண்ணசாமி போன்ற தெய்வங்கள் குல தெய்வங்களாக விளங்குகின்றனர்.

**5.ஊர்த்தெய்வ வழிபாடு:**

போரில் இறந்துபட்ட வீரர்களுக்கு அவர்களது நினைவாகக் கல்நட்டு வழிபாடுகள் செய்யப்பட்டன. இயற்கையின் சீற்றம் தணியவும், அம்மை, காலரா போன்ற நோய்களைத் தடுக்கவும், மழை இல்லாக் காலத்தில் மழை பெய்ய வேண்டியும், விளைச்சல் பெருகவும், ஊர் நன்மை பெறவும், குழந்தை வரம் வேண்டியும் நாட்டுப்புற மக்கள் ஊர்த்தெய்வங்களை வழிபட்டனர்.

**நாட்டுப்புற விழாக்கள்:**

நாட்டுப்புற மக்கள் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து வாழ்ந்திருந்த போதிலும் அவர்கள் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களாகும்.

**1.தமிழ் வருடப்பிறப்பு விழா:**

ஆண்டுதோறும் சித்திரை முதல் நாள் தமிழ் வருடப்பிறப்பு கொண்டாடப்படுகிறது.

**2.சித்திரா பௌர்ணமி விழா:**

சித்திரை மாதம் பௌர்ணமி நாளில் கடல் தெய்வமான வருணனுக்கும், முனீஸ்வரன் சாமிக்கும் காவடிகள் எடுத்து. பொங்கலிட்டு வழிபடுகின்றனர்.

**3.வைகாசி விசாகம் விழா:**

ஐவகாசி மாதம் முழு நிலவன்று அனைத்து முருகன் கோயில்களிலும் வைகாசி விசாகம் விழா மிகச் சிறப்பாக

நடைபெறுகிறது. இலங்கை, சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து, ஜப்பான், பர்மா போன்ற நாடுகளில் வைகாசி விசாகம் 'புத்தபூர்ணிமா' என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது.

**4.ஆடிபதினெட்டாம் பெருக்கு விழா:**

'ஆடிப்பட்டம் தேடி விதை' என்பதற்கேற்ப உழவர்கள் உழவுத் தொழிலைத் தொடங்கும மாதம் ஆடி மாதமாகும். ஆடி மாதம் பதினெட்டாம் நாளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி வருகின்ற காவிரித்தாய்க்கு விழா எடுத்து நாட்டுப்புற மக்கள் வழிபடுகின்றனர்.

**5.வரலெட்சுமி விரதம்:**

ஆடி மாதம் கடைசி வெள்ளிக்கிழமையன்று வரலெட்சுமி விழாவினைக் கொண்டாடுகின்றனர். சுமங்கலி பெண்கள் தங்களின் கணவன், குழந்தைகள் நலமுடன் இருக்க வேண்டி இலட்சுமியை வேண்டி நாள் முழுதும் விரதமிருந்து வெள்ளிக்கிழமை மாலையில் சர்க்கரைப் பொங்கல் சமைத்து, மஞ்சள் கயிறு, மஞ்சள், குங்குமம், வாழைப்பழம், பூ இவற்றை லெட்சுமி முன்பு வைத்து வணங்கி வழிபடுகின்றனர்.

**6.பிட்டுத் திருவிழா:**

ஆவணி மாதம் மூல நட்சத்திரத் திருநாளன்று மாலை வேளைகளில் பிட்டுத் திருவிழா கொண்டாடப்படுகிறது. சிவபெருமானுக்கு நாட்டுப்புற மக்கள் நிகழ்த:தும் பெருவிழா இதுவாகும்.

**7.விநாயக சதுர்த்தி விழா:**

ஆவணி மாதம் வளர்பிறையில் சதுர்த்தி தினத்தன்று சிவபெருமானின் மூத்தப் பிள்ளையான விநாயகருக்குச் சிறப்பு செய்யும் வகையில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

**8.நவராத்திரி விழா**:

புரட்டாசி மாத இறுதியில் ஒன்பது இரவுகள் இதனைக் கொண்டாடுகின்றனர். சக்தியின் பெருமையினை உலகிற்கு உணர்த்தவும், மக்கள் வாழ்வில் மகிழ்ச்சி பெறவும் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

**9.சரஸ்வதி பூஜை விழா:**

நவராத்திரியின் ஒன்பதாம் நாள் சரஸ்வதி பூஜையினைக் கொண்டாடுகின்றனர். சரஸ்வதி பூஜையன்று கல்விக் கடவுளான சரஸ்வதியை வழிபட்டால் கல்விச் செல்வம் பெருகும் என்பது நாட்டுப்புற மக்களின் நம்பிக்கையாகும்.

**10.தீபாவளி விழா:**

திருமால் கண்ணனாக அவதரித்து, மண்ணுலகில் மனிதர்களுக்குப் பற்பல துன்பங்களைத் தந்த நரகாசுரனைக் கொன்றழித்த நாளே தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது.

**11.கார்த்திகை தீபம் விழா:**

கார்த்திகை மாதம் முழுநிலை நாளன்று கார்த்திகை தீபம் விழா கொண்டாடப்படுகிறது. இந்நாளில் வீடுகள்தோறும் விளக்கேற்றி அலங்கரிக்கின்றனர்.

இவ்விழாக்கள் அனைத்தும் நாட்டுப்புற மக்களின் ஒற்றுமையை வளர்க்கவும், ஒருமைப்பாட்டுணர்வை வெளிப்படுத்தவும் பயன்படுகின்றன.

-------